# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2277/45 – 2022 අප්‍රේල් මස 27 වැනි බදාදා – 2022.04.27

***2277/45 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை***

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவின், இல. 577 - வேரஹெர வடக்கு, இல. 578-கட்டுவாவல வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வேரஹெர, கட்டுவாவல கிராமங்களில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2016.08.08 ஆந் திகதிய CO/DSO/2016/393 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட பெயர்களையும் விஸ்தீரணங்களையும் உடைய காணித் துண்டுகளுக்கான எல்லைகள்:

*1.* **துண்டு இல. *1* - விஸ்தீரணம்: 0.0964 ஹெக்டயார்**

வடக்கு: ஜயந்தி குணசேக்கர மற்றும் நிப்புன் குணசேக்கர ஆகியோர் உரிமை கோரும் வரி மதிப்பீட்டு இல. 303/A ஐ உடைய காணி நிப்புன் குணவர்தன உரிமை கோரும் பிலியந்தலை வீதியில் வரி மதிப்பீட்டு இல. 202/A ஐ உடைய காணி மற்றும் கால்வாய்; கிழக்கு: கால்வாய்; தெற்கு : பிலியந்தலை வீதியும், ஜயந்தி குணசேக்கர மற்றும் நிப்புன் குணசேக்கர ஆகியோர் உரிமை கோரும் வரி மதிப்பீட்டு இல. 303/A ஐ உடைய காணியும்; மேற்கு: ஜயந்தி குணசேக்கர மற்றும் நிப்புன் குணசேக்கர ஆகியோர் உரிமை கோரும் வரி மதிப்பீட்டு இல. 303/A ஐ உடைய காணி.

***2. துண்டு இல. 2 - பிலியந்தலை வீதியில் வரி மதிப்பீட்டு இல. 68/C ஐ உடைய காணி - விஸ்தீரணம்: 0.0153 ஹெக்டயார்***

*வடக்கு: கால்வாயும் இக் காணியின் எஞ்சிய பகுதியும்; கிழக்கு: இக் காணியின் எஞ்சிய பகுதி; தெற்கு: இக் காணியின் எஞ்சிய பகுதியும் டப். ஐ. ஏ. நாணாயக்கார உரிமை கோரும் பிலியந்தலை வீதியில் வரி மதிப்பீட்டு இலக்கம் தெரியாத காணியும்; மேற்கு: கால்வாய்.*

***3. துண்டு இல. 3 - பிலியந்தலை வீதியில் வரி மதிப்பீட்டு இல. தெரியாத காணி - விஸ்தீரணம்: 0.0171 ஹெக்டயார்***

*வடக்கு: கால்வாய், துண்டு இல. 2 மற்றும் டப். ஐ. ஏ. நாணயக்கார உரிமை கோரும் பிலியந்தலை வீதியில் வரி மதிப்பீட்டு இலக்கம் தெரியாத காணி; கிழக்கு: டப். ஐ. ஏ. நாணயக்கார உரிமை கோரும் பிலியந்தலை வீதியில் வரி மதிப்பீட்டு இலக்கம் தெரியாத காணி; தெற்கு: டப். ஐ. ஏ. நாணயக்கார உரிமை கோரும் பிலியந்தலை வீதியில் வரி மதிப்பீட்டு இலக்கம் தெரியாத காணி, பிலியந்தவை வீதி மற்றும் கால்வாய்; மேற்கு: கால்வாய்.*

*எஸ். எம். சந்திரசேன.*
*காணி அமைச்சர்.*

*எனது இல. 4-3/10/2016/LRB/68*
*காணி அமைச்சு, "மிஹிகத மெதுர",*
*இல.1200/6, இரஜமல்வத்தை வீதி,*
*பத்தரமுல்லை,*
*2021, மாச்சு 02.*

EOG *04 - 0-206*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*